**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF IV ADDITIONAL SESSIONS JUDGE
S.C. No. 86/2023
Prosecution witness : PW -2

| | | | |
|---|---|---|---|
| Name | Mr. Sathish | Caste | : Not willing |
| Father's Name | : Vijayakumar | Calling | :Porter Delivery boy |
| Village | : T.V.K. Nagar | Religion | : Hindu |
| Taluk | : Chennai | Age | : 31 |

(A4/ Accused present. Case against A1,A5,A6,A2,A3, pending in SC No. 465/2012)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 30th day of January, 2025.

**முதல் விசாரணை: ( அரசு தரப்பில்)**

நான் சென்னையில் திரு.வி. கா நகரில் கதவு எண் 359 ல் குடியிருக்கிறேன். அதற்கு முன்பாக அயனாவரதில் குடியிருந்தேன். என் பெரியப்பாவின் மகன் பெயர் ஞானசேகரன். அயனாவரத்தை சேர்ந்த சங்கர் என்பவரை எனக்கு தெரியும். மேற்படி சங்கரின் தம்பி பெயர் கதிர். மேற்படி கதிர் என்பவரை எனது பெரியப்பாவின் மகன் ஞானசேகரன் மற்றும் அவரது நண்பர் கொலை செய்ததாக தெரியவந்தது. இவ்வழக்கு சம்பவம் நடக்கும் போது எனக்கு 17 வயது இருக்கும். என் தாயாரின் பெயர் லதா ஆகும். ஆஜர் எதிரிகளை தெரியாது, முதல் எதிரி சங்கர் என்பவரை மட்டும் தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. மேற்படி சங்கர் என்ற எதிரி இறந்து விட்டதாக கேள்விபட்டேன். எனது தந்தை கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார். கடந்த 19-01-2010 அன்று சிக்கன்குன்னியா காரணமாக நான் பள்ளிக்கூடம் செல்லாமல் வீட்டில் இருந்தேன், அந்த சமயத்தில் நான் 12 ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். நான் வீட்டில் இருந்த போது என் தந்தை விஜய குமார் வீட்டில் இருந்தார். நான் படுத்து கொண்டிருந்தேன். என் தந்தை டி.வி பார்த்து கொண்டிருந்தார். பகல் சுமார் 1,1.30 மணியளவில் வீட்டிற்குள் இரண்டு நபர்கள் வந்தார்கள். அவர்கள் தலையில் Helmet அணிந்திருந்தார்கள். என் தந்தையை சங்கர் என்ற எதிரி வெட்டினார். மற்றெரு எதிரியின் பெயர் தெரியவில்லை. சங்கர் என்ற

எதிரி என் தந்தையின் தலையில் கத்தியால் வெட்டினார். நான் பதறி எழுந்து சங்கர் என்ற எதிரியை தடுத்தேன். அப்போது எதிரி சங்கர் என்னுடைய மூக்கை வெட்டினார். என்னை வெட்டியதால் நான் கீழே விழுந்துவிட்டேன். என்னை வெட்டிய சங்கர் என் தம்பியை(கதிர்) வெட்டினிங்களேடா என்று கத்தினார். சங்கரின் உடன் வந்த மற்றொரு எதிரி என் தந்தையை கத்தியால் வெட்டினார். வேறு யாரும் வரவில்லை. நான் மீண்டும் எழுந்து மேற்படி சங்கரை தடுக்க முயன்ற போது கத்தியால் என்னுடைய இடது கையில் மணிக்கட்டில் ஒரு இடத்தில் வெட்டினார், அதில் என்னுடைய இடது கை மணிக்கட்டு தொங்கியது. வெட்டு பட்ட என் தந்தை என்னைபிடித்து இழுத்தார். என் பிள்ளையை (என்னை) விட்டுங்கடா என்று கத்தினார். அவர் என்னை காப்பாற்றிவிட்டு வெட்டு வாங்கினார். 2 பேரும் தான் வெட்டினார்கள் மற்றொரு எதிரியின் பெயர் தெரியவில்லை. அவர்கள் ஓடிவிட்டார்கள். நான் ரத்தம் சொட்ட சொட்ட வந்தபோது என் அம்மா படிக்கட்டில் வந்துகொண்டிருந்தார். என் தாயார் லதாவிடம் 2 பேர் வெட்டிவிட்டு ஓடினார்கள் என்று சொன்னேன். யாருடா என்று கேட்டார்கள் சங்கர் வெட்டியதாக சொன்னேன். என் தாயாரும் மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். 10 நிமிடத்திற்குள்ளாக போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். என்னை வாகனத்தில் மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். என் தந்தை விஜயகுமார் வீட்டிலேயே இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். நான் அரசு ராஜீவ் காந்தி மருத்துவ மனையில் இருந்த போது என்னை திரு.வி. கா. நகர் போலீசார் வந்து என்னை விசாரணை செய்தார்கள். என் தாயார் புகார் கொடுத்தாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை:(4 எதிரி தரப்பில் )</u>

இல்லை.

(வழக்கறிஞர் ஆஜராகி, கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்தும் கூட சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய முன்வராமல் சென்றுவிட்ட காரணத்தினால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என முடித்து உத்தரவிடப்பட்டது. )

Taken down by me in the open court and was read over to the witness and accepted and signed by him/her to be correct.

PANDIARAJ Digitally signed by PANDIARAJ

Dt.30.01.2025 IV Addl. Sessions Judge